# பஹ்ரின் தமிழ் கிறிஸ்தவ திருச்சபை

## வாலிபர் ஜெப ஐக்கிய சங்கிலித்தொடர் ஜெபம். மார்ச் 2018

**நாள்**: **8th & 9th March 2018**

**நேரம்**.. வியாழன் மாலை 5 மணி முதல் வெள்ளி மாலை 5 மணி வரை

| எண் | பெயர் | நாள் : | நேரம் |
|---|---|---|---|
| | திரு / திருமதி ……………………………… | வியாழன் / வெள்ளி | ………………….. |

**" .. செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்.;."..** *நீதி. 15:8*

---

## துதிப்போம்!

- ❖ எக்காலத்தும் நம்மைவிட்டு அகலாத கர்த்தரின் பெரிதான கிருபையால் இத்தேசத்திலும் நாம் பாதுகாப்பாய் நடத்தப்பட்டு இந்த மார்ச் மாதத்தினையும் காணச்செய்த தேவாதி தேவனை நன்றியோடு துதிப்போம்.
- ❖ இலவசமாய் இரட்சிப்பின் நன்மைகளை பெற்றுக்கொள்ள இவ்விடத்தில் கிருபையாய் நாம் பெற்ற தேசிய நற்செய்தி ஆலயத்திற்காக பஹ்ரைன் தமிழ் கிறிஸ்தவ திருச்சபைக்காக, தமிழ் மொழி ஆராதனைக்காக பரிசுத்த தேவனை நன்றியோடு துதிப்போம்.
- ❖ இவ்வாண்டிலும் தங்களை அற்பணித்து திருச்சபைக்காக செயல்பட தேர்வு செய்யப்பட்டிருக்கும் சபை மூப்பர்களுக்காக செயற்குழுவிற்காக நன்றியோடு ஜெபிப்போம்.
- ❖ அனைத்து நிலைகளிலும் திருச்சபைக்கு ஆதரவாய் இருந்து தங்கள் வருகையாலும் உதாரத்துவமான காணிக்கைகளாலும் திருச்சபையின் ஊழியங்களைத்தாங்கி உயர்வடையச்செய்துவரும் அனைத்து மக்களுக்காக கர்த்தரை நன்றியோடு துதிப்போம்.
- ❖ கால நிலைகள் மாறிடினும், கலக்கங்கள், கஷ்டங்கள், கடன் பிரச்சனைகள் ஏற்பட்ட நேரங்களிலும் கனிவின் கரங்களால் அரவணைத்து கருத்தாய் நடத்தி வரும் அற்பதர் இயேசுவை நன்றியோடு துதிப்போம்.

## ஜெபிப்போம்!

**IELC கண்பார்வையற்றோர் பாடசாலை (IELC-Blind School)**

- ❖ பிறக்கும்போதே கண் பார்வை திறனில்லாது மற்றவர் உதவியோடு வாழ்ந்துவரும் பல வயதுடைய ஆண் பெண் இருபால் மக்களை நாம் வாழும் இடங்களில் காண்கிறோம்! இத்தகைய பார்வைத்திறனில்லாத மக்களையும், இவர்களை வளர்க்கவும் பராமரிக்கவும் முடியாது தவிக்கும் எத்தனையோ பெற்றோர்கள் மற்றும் உறவுகளையும் நம்மில் பலர் பார்த்திருக்கிறோம். இப்படிப்பட்ட கண் தெரியாத மக்களை, பிறர் துணையின்றி செயல்பட பயிற்சி கொடுத்து, சுயமாகவே மற்றவர்களைப்போலலே தங்கள் அன்றாட கடமைகளை செய்யலாம் என்று தங்கள் வாழ்விற்கு நம்பிக்கையின் ஒளியூட்டுகின்ற மிகவும் மேன்மையான அற்பணிப்பின் ஊழியத்தை மிகவும் கருத்தோடு நேர்த்தியாய IELC கண்பார்வையற்றோர் பாடசாலையினரால் நடத்தப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பருகுர் என்ற பெரிய நகரத்தில் கடந்த 1972-ம் ஆண்டு தமிழக அரசு அங்கீகாரத்தோடு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கி எந்த உதவியும் இல்லாது குறிப்பாக பார்வையற்ற பிள்ளைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஊழிய நோக்குடன் இத்த ஸ்தாபனம் மகிமையாக செயல்பட்டுவருகிறது.
- ❖ பார்வை திறனில்லாத மாற்றுத்திறனாளி மக்களுக்கான பாடசாலையில், தங்கள் வாழ்வில் மற்றவர் உதவியின்றி சுயமாய் செயல்பட கொடுக்கப்படும் அனைத்து பயிற்சிகளும், கல்வி பாடத்திட்டங்களும், மருத்துவ உதவிகளும் பயன்பெற்று வாழ்கையில் மற்ற மக்களைப்போல இவர்களும் செயல்பட ஜெபிப்போம்.
- ❖ இந்த ஊழியத்தை உதாரத்துவமாய் தாங்கும் மக்களுக்காகவும், வரும் நாட்களில் தேவைப்படும் உதவிகள் யாவும் ஏற்ற வேளைகளில் கிடைக்கப்படவும் ஜெபிப்போம்.

- ❖ இந்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவ மாணவிகள், அரசு தேர்வுகளில் அதிக மதிப்பெண்களுடன் உயர் கல்வி பெற்று உயர்வான பணியிடங்களில் அமர்த்தப்பட்டு வாழ்வு செழித்தோங்கிட ஜெபிப்போம்.
- ❖ கர்த்தரின் கிருபையால் பார்வையடைய வாய்ப்புள்ள மாணவர்களுக்கு கொடுக்கப்படும் மருத்துவ சிகிட்சை, கண் அறுவை சிகிட்சைகள் பலன்படவும் அதன் மூலம் மற்ற மக்களைப்போல பார்வை பெற்று இயல்பான பணிகளைச் தாமாகவே செய்யவும் ஜெபிப்போம்.
- ❖ பார்வை திறனில்லாத மாற்றுத்திறனாளி மக்கள் சுயமக செயல்பட உருவாக்கப்பட்டுள்ள நவீன உபகரணங்கள் இந்த ஸ்தாபனத்தின் பார்வைத்திறனில்லாத மக்களுக்கு கர்த்தரின் தயவால் கிடைக்கப்பெற்றிட ஜெபிப்போம்.
- ❖ பார்வை திறனில்லாத மாற்றுத்திறனாளி மக்கள் பார்வையடைய அனுபவ மிக்க கண் மருத்துவர்களும் தாதியர்களும், உயரிய நவீன அறுவை சிகிட்சை முறைகளும் தேவைக்கேற்ப இலவசமாய் பெற்றிட ஜெபிப்போம்.
- ❖ பார்வை திறனில்லாத மாற்றுத்திறனாளி மக்களுக்காக கொடுக்கப்படும் பலதரப்பட்ட சிறு தொழில் மற்றும் சுய தொழில் வேலைவாய்ப்பு பயிற்சி திட்டங்களுக்காக, அதன் பயிற்சியாளர்களுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- ❖ இந்த ஸ்தாபனத்தின் அனைத்து நிர்வாக இயக்குநர்களுக்காகவும், கல்விப்பணியாளர்களுக்காகவும், பயிற்சியாளர்களுக்காகவும், அனைத்து மருத்துவ பணியாளர்களுக்காகவும், இறைப்பணியாளர்களுக்காகவும் ஊக்கமாய் ஜெபிப்போம்.

**IELC School for the Blind** was started by the pioneer missionaries in the sprawling campus which is located on the outskirts of Barugur
a big town in Krishnagiri District. This institution was started in the year 1972 with a motto of serving to the under privileged and less advantaged people of our district in general and to the Differently Abled (Visually Impaired) in particular. It is a recognized Institute by the State Government of Tamil Nadu.
Since from its inception, this institute is serving for the holistic development of these people irrespective of caste, creed, religion and sex. So far, nearly 600 VI children were benefitted and presently we have got 131 children in our project (84 Boys and 47 girls).

In order to achieve our objects we are implementing the following programs which would provide the benefits at all levels of their age group.

- *To provide Quality Education in a conducive class room atmosphere*
- *To cater to the needs of Physical, Mental and Social wellbeing of the children*
- *To make them self-reliant persons in the society*
- Early intervention program for the children between 0 - 6. Currently 18 children are benefitted under this program.
- Integrated Education from Std IX – XII in the neighboring normal school. 25 children are undergoing this system of education.
- Adult Vocational Training (Sheltered Workshop)
- Cloth & mat weaving, Computer training, Tailoring
- Chair Re-canning, Envelop Making, Candle making,
- Community Based Rehabilitation Program
- Awareness programs
- Home based Education
- Job oriented training in the community
- Gainful employment through outsourcing

- Guiding to get government supports
- Aftercare program
- Placement Services - Career guidance and counseling
- Health care and Referral services through networking
- Supportive Special Programs
- Supportive Employment service
- Online Spoken English Class
- Self-development program
- Audio Library

---

1. நாம் கடந்து சென்றுகொண்டிருக்கும் பரிசுத்த லெந்து காலங்களில் நம் மனம் ஒருமுகப்பட்டு தியான ஆராதனைகளில் பங்குபெறுதலும், வாழ்வில் பரிசுத்தமும், அன்பும், ஐக்கியமும், இயலாதோருக்கும் இல்லாதோருக்கும் தங்களை ஒறுத்து உதவுதலும், கிடைக்கும்நேரங்களில் ஜெபத்திலும் வேத வாசிப்பிலும் செலவிட்டு ஆவிக்குரிய வாழ்வில் உயர்வுகளை பெற்றிட ஜெபிப்போம்.
2. சபைகள் சமாதானம் பெற்று, பக்தி விருத்தியடைந்து, கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் வளர்ந்து பெருக ஜெபிப்போம்.
3. S.S.L.C, +2 தேர்வு எழுதும் மாணவ மாணவிகளுக்காக ஜெபிப்போம்.
4. வியாதியஸ்தர், துன்பப்படுவோர், தேவையிலிருப்போருக்காக, கற்பிணிப்பெண்களின் பேறுகால விடுதலைக்காக, பிள்ளைச்செல்வங்களுக்காக வேண்டுதல் செய்வோருக்காக ஜெபிப்போம்..
5. பணிவாய்ப்புகளுக்காக காத்திருப்போர், வேலை இழக்கும் தருவாயில் மாற்று வேலை தேடுவோர், விசா பிரச்சனைகளோடிருப்போர் அனைவருக்காகவும் ஜெபிப்போம்.
6. நல்ல காலநிலைக்காக, பாதுகாப்பான பிரயாணங்களுக்காக ஜெபிப்போம்.
7. வளைகுடா மற்றும் அரபு நாடுகளின் அமைதி, அரசியல் ஸ்திரத்தன்மைகளுக்காக, போர் மற்றும் குண்டுவெடிப்பு தாக்குதல்களுக்குள்ளாகிவரும் சிரியா, ஈராக் போன்ற நாட்டு மக்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.
8. இலங்கை தமிழ் மக்கள் மறுவாழ்வு புனரமைப்பு பணிகள் சரிவர நிறைவேற்றப்படவும், சம அந்தஸ்து உரிமை அளிக்கப்படவும் ஜெபிப்போம்.
9. உலகின் பல பகுதிகளிலும் நம் பாரத தேசத்திலும் அண்டை நாடுகளிலும் கோடிக்கணக்கான பண மோசடி ஊழல்களில் சிக்கிவரும் அரசியல்வாதிகளும், பெரும் வியாபாரம் செய்பவர்களும் தண்டிக்கப்படவும்.., பாலியல் வன்கொடுமை, கொள்ளை, வழிப்பறி, திருட்டு, தீவரவாத செயல்களால், இன மத வெறி தாக்குதல்களால், உற்றார் உறவினர்களையும், உடமைகளையும் இழந்து ஆதரவற்று நிற்கும் மக்களுக்காக ஜெபிப்போம்.

---

“ There are **two things** to be aware of if the **fight against evil inclinations** is to have any chance of success.
**First**, our efforts will never be sufficient on their own. Only the **grace of Christ** can win us the victory.
**Second**, one passion can only be cured by another - a misplaced love by a greater love, wrong behavior by right behavior that makes provisions for the desire underlying the wrongdoing, recognises the conscious or unconscious needs that seek fulfillment and either offers them legitimate satisfaction or transfers them to something compatible with the person's calling.”
Therefore our **chief weapons are Prayer, Patience, and Hope**.

---

*[Church circulation only]*